மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லே.

(இ) இவ்வினவிற்கு இடமில்லே.

Tamil Nadu Elementary School Teachers' Federation, Salem

* 222 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government have examined certain representations made recently by the Salem Branch of the Tamil Nadu Elementary School Teachers' Federation; and

(*b*) the action taken thereon?

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி–தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சேலம் கிளே அண்மையில் விடுத்த சில வேண்டுகோள் பற்றி அரசு ஆராய்ந்ததா ?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

(இ) மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட வேண்டுகோள் ஆய்வில் உள்ளது.

R.V.G. High School, Kurichikottai

* 223 *Q.*—THIRU N. R. THIAGARAJAN, THIRU V. ISVARMURTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that certain persons forced their entry into the R.V.G. High School in Kurichikottai of Coimbatore district during October 1968 and attacked several teachers and students and injured them; and

(*b*) if so, the action taken thereon?

குறிஞ்சிக்கோட்டை ஆர். வி. ஜி. உயர்நிலேப் பள்ளி

திரு. என். ஆர். தியாகராஜன், திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம் குறிஞ்சிக்கோட்டை ஆர். வி. ஜி. உயர்நிலேப் பள்ளியில் அத்து மீறி நுழைந்து சில ஆசிரியர்களேயும், மாணவர்களேயும் 1968 அக்டோபரில் தாக்கி பலரை காயப்படுத்தியது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குறிப்பிட்ட நிகழ்ச்சி பள்ளிக்கூட அலுவல்களுடன் தொடர்பு இல்லாததால் கல்வித் துறையால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லே.

26th March 1969]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, அந்தப்பள்ளியிலே நுழைந்து அங்கேயிருந்த சாமான்களையெல்லாம் நொறுக்கி, ஆசிரியர்களையும் மாணவர்களையும் அடித்திருக்கிறார்களே, அதுபற்றி நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்.?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளி சம்பந்தப்பட்ட வரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னேன். போலீசில் மனுக்கொடுத்திருந்தால் அந்த நிலவரத்திற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாவட்டக் கலெக்டர் அவர்களுக்குப் பள்ளி தலைமை ஆசிரியர் இது பற்றி எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் நகல் கூட எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்திற்குச் சரியான முறையில் தகவல் வரவில்லை என்று சொல்வது உண்மையல்ல.. அது பற்றி கலெக்டர் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பதிலைச் சரியாகக் கவனித்திருந்தால் அரசாங்கத்திற்கு வந்த தகவல் சரியானதாகத் தெரிந்திருக்கும். கல்வித்துறை சம்பந்தப்பட்ட வரையில் எதுவும் இல்லாததால் நடவடிக்கை இல்லை. போலீஸ் துறைக்கு இது சார்பாக எழுதியிருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.

Fisheries and Navigation Technology

* 224 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of students in the Three-Year diploma course of Fisheries and Navigation Technology taught in Central Technological Institute, Madras;

(*b*) whether the 45 persons, who studied during the last three years, are unemployed ;

(*c*) whether 15 students are trained every year; and

(*d*) whether the candidates cannot be employed elsewhere other than Fisheries Department ?

கயல் நுணுக்க கலமியக்குமியல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மத்திய தொழில் நுட்ப கூடத்தில் கயல் நுணுக்க கலமியக்குமியல் (Fisheries and Navigation Technology) என்ற மூன்றாண்டு டிப்ளமாவுக்கு ஆண்டுக்கு எத்தனை பேர் படிக்கிறார்கள்?

(இ) சென்ற மூன்றாண்டுகளாகப் படித்த 45 பேர் வேலையின்றியிருக்கிறார்களா ?

(உ) இன்னும் ஆண்டுக்கு 15 பேருக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறதா?

(எ) இவர்கள் மீன் இலாகா தவிர வேறு எங்கும் வேலை பார்க்க இயலாதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 15 மாணவர்கள்.

(இ) 15 பேருக்குத் தனியார் துறையிலும், மத்திய, மாநில அரசுகளிலும் வேலை கிடைத்துவிட்டது. 5 மாணவர்கள் சிறப்புப் பாடமுறைகள் பயிலுகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் படிப்பை முடித்த பிற மாணவர்களைப் பற்றித் தகவல் கிடைக்கவில்லை.

(உ) ஆம்.